
www.tamilarangam.net

# ழமுழக்கம்

முழக்கம்-10.
ஜீன்-84.




ஓ.. எங்கள் தோழர்களே...! இதோ... இதோ...
நீங்கள் தூவிய சிந்தனைப் பொறிகளின் வேகப்பரவலாய்
எங்கள் களத்துமேட்டில் ஆயிரமாயிரம் கரங்களின் அசைவில்..
ங்கள் இலட்சிய கனவாம் சுதந்திர விடியலை சிருஷ்டித்தே
முடிப்போம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செம்பறவைகள் சிலிர்த்தெழுந்து வருகின்றன!

ஈழத்து மண்ணில்
சமாதானப் புறாவின்
இதய பாகத்தில்
ஏகாதிபத்திய – சியோனிச
ஆதிக்க வாள்கள்
ஆழச் செருகப் படுகையில்
அதோ...அந்த செம்பறவைகள்
சிலிர்த்தெழுந்து சிறகடித்துச்
செல்கின்றன!




இனவெறி இறக்கை கொண்ட
பாசிச லங்கா வெண்பறவை
அபயக்குரல் ஒலிக்கு
செவிசாய்த்து பறந்து வந்த
ஏகாதிபத்திய – சியோனிச
வெண்பறவைக் கூட்டத்தின்
போர்வெறி இறக்கைகளை
ஒடித்து, முறிப்பதற்கு
செம்பறவைகள்
ஆயுதக் கவசமுடன்
அணி, அணியாய் செல்கின்றன;
ஏ! ஏகாதிபத்திய வெண்பறவையே
நீ திரும்புகின்ற திசைகளெல்லாம்
செம்பறவை வர்க்கங்கள்
சிறகடித்து,! சிலிர்த்தெழுந்து வருவதனால்
உனது
ஆதிக்கக் கனவுகளின்
அஸ்த மனம் ஆரம்பிக்கிறது
இனி மேல்
உனது போர்வெறி வாள்கள்
புரட்சிகர வாள்முனையில்
எதிர் கொள்ளப்படும்
உனது அஸ்தமனக் காலம் வரை
செம் பறவை வர்க்கங்கள்
ஆயுதக் கவசங்களை ஒரு போதும்
களையாது,

— ஈழ இளங்கோ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## ★ சி. ஐ. ஏ. உளவாளிகள் கடத்தல்

# ஈழப் புரட்சியின் வளர்ச்சிக்கு உந்துதல் முனை!

★ முட்டி மோதிக்கொண்டிருக்கும் பொருளாதாரப் பிரச்சனைகள்.

★ தேசங்களை அடிமை கொள்வதற்கான ஏகாதிபத்தியங்களின் யுத்த ஆயத்தங்கள்.

★ அழிவாயுதங்களின் அபரிமித உற்பத்திகள்.

இப்படியான நெருக்கடிமிகுந்ததும், பரபரப்பானதுமான உலக நடவடிக்கைகளின் இடையே அய்ந்து தினங்களாய் உலகின் கவனம் ஈழப் போராட்ட திசை நோக்கித் திரும்பியது.

எமது தலைமையான ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியின் (EPRLF) இராணுவப்பிரிவான மக்கள் விடுதலைப்படையால் (PLA) நடைமுறைப்படுத்தப்பட்ட இப்புரட்சிகர இராணுவ நடவடிக்கையானது சர்வதேச ரீதியிலான முற்போக்குச் சக்திகளிடத்தில் ஈழ விடுதலைப் போராட்டத்தின் குணாம்சம், அதன் திசைவழி என்பவற்றைத் தெளிவாக எடுத்துச் சென்றுள்ளது.

விடுதலை என்றால் என்ன? அதற்கான போர்த்தந்திரங்கள், நடைமுறைத்தந்திரங்கள் எப்படி இருக்க வேண்டும் என்கின்ற எவ்வித நோக்கமுமற்று முழுக்க, முழுக்கப் பிற்போக்குவாதச் சிந்தனையில் அடிப்படையில் செயல்பட்டு வரும் தமிழர் விடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலைக் கூட்டணிக்கோ அல்லது அப்பாப்பிள்ளை அமிர்த லிங்கத்துக்கோ இந்த நடவடிக்கையானது கண்டிக்கப்பட வேண்டியதாய் இருக்கலாம். அதே போலவே "தமிழீழ விடுதலை அணி" எனவும் அதன் தலைவர் எனவும் கூறப்படும் கோவை மகேசனுக்கும் இந்த நடவடிக்கை முண்டியடித்து அறிக்கைவிட்டு கண்டிக்க வேண்டியதாகவே இருக்கமுடியும். ஏனெனில் இவர்கள் ஏகாதிபத்திய அமெரிக்காவின் நலன்களுக்காக விசுவாசமாக உழைக்கும் அமெரிக்க தாசர்கள் என்பதில் அய்யப்பாடு கிடையாது. இவர்கள் அழுகி துர்நாற்றம் அடிக்கும் நிலப்பிரபுத்துவப் பண்பாடுகளைத் தூக்கிப்பிடிக்கும் கோமான்கள் என்பதையும் நாம் அறிவோம்.

ஆனால் கொரில்லாப் போராட்டத்தின் உச்சாணிக் கொம்புக்குச் சென்று விட்டோம் என்று மார்தட்டிக் கொள்ளும் "அசல் மாக்சியவாதிகளான" 'வீரம்' மிகு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் மேற்கண்ட புரட்சிகர நடவடிக்கை மீது குருட்டுத்தன மாக வசைமாரி பொழிந்துள்ளனர்.

மார்க்சிச / லெனினியத்தின் செழுமையான வளர்ச்சியும் மார்க்சிய/லெனினியம் மக்களிடம் ஏற்படுத்தியுள்ள தாக்கமும் "மார்க்சியத்தின் பகைவர்களையும் மார்க்சிய வேடமிடுமாறு நிர்ப் பந்திக்கும்" இன்றைய காலகட்டத்தில் ஒரு நபரோ அல்லது இயக்கமோ தன்னை மார்க்சியவாதி எனப் பிரகடனப் படுத்துவது மூலமாக அவர்களை மார்க்சியவாதிகள் என நாம் கணிப்பிட முடியாது. நடைமுறையில் எவ்வாறு செயல் படுகிறார்கள் என்பதைக் கொண்டே மார்க்சியவாதிகள் யார் என்பதை அறியமுடியும்.

ஈழத்திலும் 'மார்க்சியத்தில் மனம் தோய்ந்தவர்களாய் மார் தட்டிக்கொள்ளும் இவர்கள் எந்த முகாமைச் சேர்ந்தவர்கள், எந்த வர்க்கத்திற்கு வக்காலத்து வாங்குகிறார்கள் என்ற உண்மைகளைத் தமது எஜமானத்துவத்திற்கு ஆபத்து ஏற்பட்ட வேளையில் உதவமுன்வந்த எஜமான விசுவாசம் மூலம் அம்பலப் படுத்தியுள்ளனர்.

ஈழதேச விடுதலைப் போராட்டம் உக்கிரம் அடைந்துள்ள இக்காலகட்டத்தில் ஈழ விடுதலைப் போராட்டத்தை அடக்கி, அழித்துவிட சிறீலங்கா இனவாதப் படுகொலை அரசு தன்னால் இயன்ற சகலவழிகளையும் கடைப்பிடித்துவருகிறது. இதற்கான உதவியை ஏகாதிபத்திய அமெரிக்கா தாராளமாக வழங்குகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாம் பல மாதங்களுக்கு முன் இஸ்ரேலியக் கமோண்டாக்கள் சிறீலங்கா இராணுவத்திற்குப் பயிற்சி அளிக்கிறது எனக் கூறினோம். அப்போது இதுபற்றித் தமக்கு எதுவும் தெரியாது, தம்மிடம் இதுபற்றிய தகவல் எதுவும்இல்லை எனக் கூறியவர்கள் தான் தமிழ் ஈழவிடுதலைப் புலிகளும், தமிழர் விடுதலைக் கூட்டணியுமாவர்.

இன்று இஸ்ரேலிய கமோண்டாக்கள் சிறீலங்கா கொலைப் பட்டாளங்களுக்குப் பயிற்சி அளித்து வருவதை கொழும்பில் இருக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதியே உறுதிப் படுத்தியுள்ளார். **சிறீலங்கா படுகொலை அரசும் தனது இஸ்ரேலிய சியோனிச நண்பனுடனான தொடர்பைப் பகிரங்கமாகவே ஒத்துக் கொண்டுள்ளது.** அமெரிக்காவின் தூதரகத்தில் சியோனிச இஸ் ரேலுக்கு அலுவலகம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதே போலவே அலன் தம்பதிகள் சி.ஐ.ஏ; ஒற்றர்கள் என நம்புவதற்குரிய பல தடயங்கள் கிடைத்த பின்னரே அவர்கள் கடத்தப்பட்டனர்.

ஈழமண்ணில் அன்றாடம் நூற்றுக்கணக்கான மக்கள் உயிர் கள் காட்டுமிராண்டித்தனமாய்ச்சிதைக்கப்பட்ட போதும்,இனக் கலவரப்படுகொலைகாலங்களில் ஆயிரமாயிரமாய் எமதுமக்களை சிறீலங்கா கொலைப் பட்டாளமும், சிங்களவெறி ஊட்டப்பட்ட காடையரும்துவம்சம் செய்தபோதும்அப்பாபிள்ளை அமிருக்கோ, அத்துலத்முதலிக்கோ மனிதாபிமானம் பற்றித் தெரியவில்லை. ஆனால் ஈழப்போராட்டத்தை நிர்மூலமாக்க வந்த சி.ஐ.ஏ; உளவாளிகளைக் கடத்தியதுமட்டும் ஏகாதிபத்திய அடிமை களான இவர்களுக்கு ''பயங்கரவாதிகளது மனிதாபிமானமற்ற செயலாகத்'' தெரிகிறதோ?

கடத்தல் நடவடிக்கை மூலம் எதையும் சாதிக்க முடிய வில்லை என சிறீலங்கா தேசியப் பாதுகாப்பு மந்தி(ரி) அத்துலத் முதலி அலறியுள்ளான். இதன் மூலம் தமது படுதோல்வியை மறைக்க முயல்கிறான்.

இக்கடத்தல் நடவடிக்கை மூலம் சாதிக்கப்பட்ட விடுதலைப் போராட்டத்துக்கு உந்துதலான பயன்கள் என்ன என்பதைத் தொகுத்துத் தருகிறோம்;

★ ஈழ விடுதலைப் போராட்டத்தைச் சரியாக பாதையில் சர்வதேசமயப்படுத்தியுள்ளோம்.

www.tamilarangam.net



★ ஈழ விடுதலைக்காகப் போராடும் புரட்சிவாதிகள் பயங்கரவாதிகள் அல்ல. அவர்கள் மனிதாபிமானத்துக்காகவும், நியாயமான உரிமைகளுக்காகவும் போராடும் மார்க்சிச/லெனினிய ஒளியில் முன்னேறும் மாமனிதர்கள் என்பது அலன் தம்பதிகளை கடத்தியதின் மூலம் உலகுக்கு உணரவைக்கப் பட்டுள்ளது.

★ சிறீலங்கா கொலை, பாதக அரசுக்கு ஏகாதிபத்திய அமெரிக்கா எவ்வாறு உதவிசெய்து வருகிறது — ஈழப்புரட்சிக்கு எதிரான நாசகார அமெரிக்காவின் ஊடுருவல் எந்த அளவில் உள்ளது போன்ற சம்பவங்களையும் சர்வதேச அரங்கில் அம்பல மாக்கும் புரட்சிகரப் பணி செய்யப்பட்டது.

★ சிறீலங்காவின் வதைமுகாம்களில் எமது தோழர்களை கொலை வெறிகொண்டு வேட்டையாடும் படுகொலை அரசு மீது எமக்கு நம்பிக்கையில்லை. வெலிக்கடை வதைமுகாம் படுகொலை வேட்டைகளைச் செயல்படுத்திய சர்வதேச பயங்கரவாதியான சிறீலங்கா அரசால் மீண்டும் எமது தோழர்களும் சக பேராளி களும் வேட்டையாடப்படாது காக்கும் எமது தலைமையின் புரட்சிகரப் பொறுப்புணர்வையும் வெளிப்படுத்த முடிந்தது.

★ ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (EPRLF) மகத்துவமிக்க, மத்திய கமிட்டியின் செயலாளர் நாயகம் (S.G.) தோழர் பத்மநாபாவின் கட்டளைப்படி மக்கள் விடுதலைப்படை இரு ஒற்றர்களையும் எவ்விதமான தீங்கும் இழைக்காது விடுதலை செய்தது.

இதன் மூலம் கட்சி மீதும், மக்கள் மீதும் துப்பாக்கி ஆணை செலுத்த முடியாது. மக்களை அணிதிரட்டிய மக்கள் சக்தியின் தலைவனான கட்சிதான் துப்பாக்கிகளை ஆணை செலுத்தி வழி காட்டமுடியும் என்பதும், எமது புரட்சிகர இரும்பனைய கட்டுப் பாடான நடைமுறை மூலம் வெளிப்படுத்தப்பட்டது. எமது தலைமையின் இராணுவப்பிரிவின் வலுவான பலத்துக்கும் இந் நடவடிக்கை முன்னுதாரணமானது.

மொத்தத்தில் அமெரிக்க உளவாளிகளைக் கடத்தியதின் மூலம் ஈழவிடுதலைப் போராட்ட வரலாற்றில் புதியதோர் அத்தி யாயத்தை எமது தலைமையான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆரம்பித்து வைத்துள்ளது. இவ்வகையில் எமது தலைமையான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இக்

(தொடர்ச்சி 29-ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ★ மக்கள் என்றால் யார்?

# ★ மக்களிடம் நாம் கூறுவது என்ன?

**— தோழர் பிடல்காஸ்ட்ரோ**



கொடுங்கோலன் பாடிஸ்டாவின் பிடியிலிருந்து கியூபாவை மீட்டெடுக்க மார்க்சிய/லெனினியப் புரட்சிவாதிகள் தலைமையில் கியூபா மக்கள் கடும் இழப்புகளைத் தாண்ட வேண்டி இருந்தது.

அமெரிக்காவிடம் கியூபாவை அடகு வைக்க பாடிஸ்டா எடுத்த முயற்சிக்கு கியூபா புரட்சி மரண அடியைக் கொடுத்தது.

விடுதலை பெற்ற கியூபாவில் சோசலிச சமூக அமைப்பைக் கட்டியமைப்பதில் கியூபா கம்யூனிஸ்ட் கட்சி தலைமை தாங்கி வருகிறது.

ஆனால் கியூபாவின் தேசிய சுதந்திரத்தைப் பறிக்கவும், கியூபாவை மீண்டும் தனது கொள்ளைக்கார நலன்களுக்கு இணங்க வைக்கவும் அமெரிக்க ஆளும் வட்டாரங்கள் சதி வேலையில் இறங்கியுள்ளன.

கியூபா மக்களது தலைவரும், தோழருமான பிடல் காஸ்ட்ரோ மீது படுகொலை நடவடிக்கைகள் பலமுறை ஏவப்பட்டன. கியூபாவை அச்சுறுத்தும் விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. ஆனாலும் கியூபா மக்கள் தமது தேசிய சுதந்திரத் தைக் காக்கவும், புரட்சியின் ஆதாயங்களை இழந்துவிடாதிருக்க வும் உறுதியுடன் இருக்கின்றனர்.

கியூபா மக்களது தலைவரான தோழர் காஸ்ட்ரோ. சர்வதேசமெங்கும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடும் மக்களது உற்ற நண்பராவார். சிறந்த மார்க்சிய/லெனினிய சிந்தனையாளருமாவார்.

கியூபா புரட்சிக்கு முன்பு நடைபெற்ற மான்கடா படைத் தளத்தின் மீதான தாக்குதலின் போது எதிரிப்படைகளால் தோழர் பிடல் கைது செய்யப்பட்டார்.

தோழர் பிடல் பகைவர்களின் நீதிமன்றத்தில் நிறுத்தப் பட்டார். அப்போது அவர் புரட்சிவாதிகளுக்கு உரிய வழிமுறையில் குற்றவாளிகளது நீதிமன்றத்தைப் பிரச்சார மேடையாகப் பயன் படுத்தினார்.

www.tamilarangam.net



**மார்க்சிய/லெனினிஸ்டுகள் என்றால் யார்?** அவர்கள் யாருக்காகப் போராடுகிறார்கள்; எவ்வாறான வாழ்க்கைக்காகப் போராடுகிறார்கள் என்பவற்றைத் தெளிவுபடுத்தியதுடன், தன்மீது குற்றம் சுமத்திய **நிஜக் குற்றவாளிகளான மக்களின் பகைவர்களை அம்பலமாக்கினார்.**

தோழர் காஸ்ட்ரோவின் இந்தப் புரட்சிகர உரை இன்றும்கூட அதன் முக்கியத்துவத்தை இழக்கவில்லை. தேச விடுதலைக்காகவும், சோசலிசத்துக்காகவும் போராடும் மார்க்சிய/லெனினியப் புரட்சியாளர்களுக்கு தோழர் பிடல் காஸ்ட்ரோவின் உரை சிறந்த வழிகாட்டும் போதனையாகும்.

தோழர் பிடலின் புரட்சிகர உரையின் ஒரு பகுதியை இங்கு வெளியிடுகிறோம்.

★

போராட்டத்தைப் பொறுத்தவரையில், நாம் மக்களைப் பற்றிப் பேசும்போது, வேலையின்றி வாடும் 6 லட்சம் கியூபா நாட்டவர்களைப் பற்றியே கூறுகிறோம்; வாழ்க்கையை தேடுவதற்காக தங்களது தாயகத்தைவிட்டு வெளியேறாமல், தங்களது அன்றாட உணவை நேர்மையாகப் பெறவிரும்புபவர்களைப் பற்றியே கூறுகின்றோம்; பரிதாபகரமான குடிசைகளில் வாழ்ந்து வருபவர்களைத்தான் நாங்கள் குறிப்பிடுகிறோம்; ஒரு வருடத்தில் நான்கு மாதங்கள் மட்டுமே வேலை செய்துவிட்டு, மீதி நாட்களில் பட்டினி கிடக்கின்றவர்களைத்தான் நாங்கள் குறிப்பிடுகிறோம்; தங்களது துன்பங்களைக் குழந்தைகளோடு பகிர்ந்து கொள்கின்றவர்களைத்தான் நாங்கள் குறிப்பிடுகிறோம்; கல்லாய் போகாத இதயங்களைக் கணக்க வைக்கும்படியான வாழ்க்கை வாழ்ந்து வரும் இந்த 5 லட்சம் பண்ணைத் தொழிலாளிகளைத்தான் நாங்கள் குறிப்பிடுகிறோம்; ஒய்வூதியங்கள் கையாடப்பட்டு, சலுகைகள் பறிக்கப்பட்டு, சிதிலமான வீடுகளில் வாழ்ந்து வருபவர்களைத்தான் நாங்கள் குறிப்பிடுகிறோம்; இவர்கள் தங்களது ஊதியத்தை முதலாளியின் கையிலிருந்து வட்டிக்காரனின் கைக்கு மாற்றித் தருபவர்கள்; சம்பளக் குறைப்பு, வேலை நீக்கம் ஆகியவற்றையே எதிர்காலமாகக் கொண்டிருப்பவர்கள்; முடிவேயில்லாத வேலையையே தங்களது வாழ்க்கையாகக் கொண்டவர்கள்; கல்லறையில் மட்டும் ஓய்வெடுக்கின்ற இந்த 4 லட்சம் தொழிலாளர்களைத்தான் நாங்கள் குறிப்பிடுகிறோம்.

தங்களுக்குச் சொந்தமற்ற நிலங்களில் வேலைசெய்து உயிரை விடுகின்றவர்கள்; உத்திரவாதம் செய்யப்பட்ட நாட்டை நோக்கிக்

www.tamilarangam.net



கொண்டேயிருக்கும் மோசஸைப் போன்று அதைப் பார்த்துக் கொண்டேயிருப்பவர்கள்; அதை எப்போதும் தமது சொந்தமாக்கிக் கொள்ளாமல் மரித்துப் போகிறவர்கள்; எஜமானர்களின் சிறுதுண்டு நிலத்தைப் பயன்படுத்துவதற்காக, அதன் விளைச்சலில் ஒரு பகுதியைக் கொடுத்துவிடும் பண்ணையடிமைகளைப் போன்று, அதை விரும்பாமல் விருத்தி செய்யாமல், அழகுபடுத்தாமல் வைத்திருப்பவர்கள், காவலதிகாரிகள் கிராமத்தலையாரியோடு வந்து தங்களை எப்போது வெளியேறுவார்கள் என்று தெரியாததால், ஒரு ஆரஞ்சுச் செடியையோ, தேவதாரு மரத்தையோ வைக்க மனமில்லாமலிருந்து வரும் இந்த 1 லட்சம் சிறு விவசாயிகளைத்தான் நாங்கள் குறிப்பிடுகிறோம்.

மிகுந்த ஊக்கமும், தியாகத் தன்மையும் நிறைந்த, எதிர்காலத் தலைமுறையினருக்கு அவசியமானவர்களும் மிகவும் மோசமாக நடத்தப்படுபவர்களும், மிகக் குறைவாகச் சம்பளம் அளிக்கப்பட்டு வருபவர்களுமான 30 ஆயிரம் ஆசிரியர்களையும், பேராசிரியர்களையும்தான் நாங்கள் குறிப்பிடுகிறோம்.

கடன்களால் நசுக்கப்பட்டு, நெருக்கடிகளால் சீரழிந்துபோன, சூழ்ச்சி நிறைந்த நயவஞ்சக அதிகாரிகள் கூட்டத்தால் சீர்குலைந்து போன 20 ஆயிரம் சிறு வியாபாரிகளைத்தான் நாங்கள் குறிப்பிடுகிறோம்.

டாக்டர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள், பத்திரிக்கையாளர்கள், ஓவியர்கள், சிற்பிகள் போன்ற 10,000 இளம் தொழில் நுட்பக் கலைஞர்களைத்தான் நாங்கள் குறிப்பிடுகிறோம். இவர்கள் வேலை செய்ய வேண்டுமென்ற ஆர்வத்துடனும், முழு நம்பிக்கையுடனும், தங்களது பட்டப்படிப்பை முடித்துவிட்டு வெளி வந்தவர்கள்; வாழ்க்கையின் இறுதிக்கே வந்துவிட்டார்கள்; எல்லா வாய்ப்புகளும் அருகிப் போனவர்கள்; தங்களது துன்ப துயரங்களைக் கேட்பதற்கு எவருமின்றி வாடுபவர்கள்; தங்களது துரதிர்ஷ்டத்தைப் பற்றி இவர்களுக்கு நன்றாகத் தெரியும்; எனவே எல்லையற்ற துணிவுடன் போராடத் தகுதி பெற்றவர்கள் இவர்கள்; தங்கள் வாழ்க்கைப் பாதை நெடுகிலும் ஏமாற்றத்தையும் பொய் உறுதிகளையும் மட்டுமே சந்தித்து வந்த இவர்களிடம் **நாங்கள் இதை வழங்குவோம் என்று கூறப்போவதில்லை. மாறாக 'நிலைமை இவ்வாறுதான் உள்ளது; எனவே உங்களிடமுள்ள அனைத்தையும் கொண்டு இதற்காகப் போராடுங்கள்; ஒரு வேளை சுதந்திரமும் மகிழ்ச்சியும் உங்களுக்கு உரியதாகலாம்' என்றுதான் நாங்கள் கூறவிழைகிறோம்.**

★

www.tamilarangam.net

# வெள்ளைச் சுவரில் ஓர் சிவந்த கவிதை!

துப்பாக்கிக் குழாய்கள் மூலம் சீனத்தின் மீது நிலை கொண்டிருந்த அந்நிய ஆதிக்கம், உள்நாட்டுப் பிற்போக்கு வர்க்கங்களது ஆதிக்கம் என்பவற்றிலிருந்து சீனாவை மீட்டெடுக்க சீனக்கம்யூனிஸ்ட் கட்சி போராடியது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இராணுவக் கடமைகளை நிறைவேற்ற மக்கள் விடுதலைப் படை உருவாக்கப்பட்டது.

புரட்சிக்கரக் கட்சியின் கீழ்ச்செயல்பட்ட சீனத்தின் மக்கள் விடுதலைப் படைக்கும் (செஞ்சேனை) மக்களுக்கும் இருந்த பிரிக்க முடியாத தொடர்ப்பைக் கீழே உள்ள கவிதை சித்தரிக்கிறது:

அந்த இரவின் மோனத்தில்
இந்த வீரர் பயணச் சிப்பங்களோடு!
மேலும் விரைகிறார்கள்
வேகமான தாவல் — ஆனாலும்
மிருதுவாக!
இவர்களைப் பாதுகாக்கும்
விவசாயிகளின் தூக்கம் கலைவதை
இந்த வீரர்கள் விரும்பவில்லை
மறுநாட் காலை
வைகறை மலர்ந்தது!
விழித்தெழுந்த கிராமவாசிகள் — ராணுவ
வீரர்கள் சென்றிருப்பதைக் கண்டுகொண்டனர்!
எல்லாத் தண்ணீர்த் தொட்டிகளும் நிரம்பி வழிந்தன!
எல்லா வாசல்களும் கூட்டப்பட்டிருந்தன!
வெள்ளையடிக்கப்பட்டிருந்த சுவரில் தெரிந்த
துண்டுக் காகிதம் சொன்னது —

**நன்றி! போய் வருகிறோம்!**

வாங்-ஷி ஷியாங்

★

www.tamilarangam.net

# ★ ஈழ எல்லைகளுக்கு அப்பால் உள்ள ஈழ தேசக் குடிமக்களுக்கு!

சர்வதேசமெங்கும் பரந்து வாழும் ஈழதேசத்தவரே! சிறீலங்கா ஆளும் வர்க்கத்தினால் தரப்படுத்தல் என்னும் எமது கல்விக்கு நிகழ்ந்த குழிபறிப்புகளாலும், வேலைவாய்ப்பு இன்மையால் உங்களது தாயகத்தில் இருந்து கொண்டே உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடும் உரிமை மறுக்கப்பட்டதாலும் நீங்கள் உயர்கல்வி கற்றிடவும், வேலை வாய்ப்பு பெற்றிடவும் தூர தேசங்களுக்குச் சென்றீர்கள்.

நீங்கள் எந்தத் தேசத்தில் வாழும் போதும் ஈழ தேசத்தின் குடி மக்கள் தான்;

இன்று எமது தாயகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வீரமிக்க விடுதலைப் போராட்டமும், இந்தப் போராட்டத்தின் மீது வெறித்தனமான காழ்ப்புடன் குறிவைத்துப் பாயும் சிறீலங்காவின் ஆக்கிரமிப்பாளர்கள் மிலேசத்தனங்களையும் நீங்கள் அறிந்து வருகிறீர்கள்;

தனது அடக்கு முறையை மேலும் விரிவாக்க, இராணுவ இயந்திரத்தை ஒழுங்கமைக்க ஏகாதிபத்திய அமெரிக்காவினதும், இஸ்ரேல் சியோனிஸ்டுக்களதும் பேருதவியை சிறீலங்கா பாசிஸ்டுக்கள் நாடியுள்ளனர்.

ஈழ மக்கள் இப்போது ஏகாதிபத்திய பின்பலம் கொண்ட, இஸ்ரேலிய சியோனிஸ்டுக்களது நேரடி ஆலோசனையுடன் செயல்படுகின்ற சிறீலங்கா ஆக்கிரமிப்புப் படைகளால் முற்றுகையிடப்பட்டிருக்கிறார்கள்;

எனவே முன்னெப்போதையும் விட ஈழ தேசத்தின் சுதந்திரத்துக்காக மிகவும் முனைப்புடன் போராடியே தீர வேண்டியது அவசியமாகி விட்டது;

எமது சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டுவதும் சரியான புரட்சிகரத் தலைமையின் கீழ் அய்க்கிப்பட்டு முன்னேறுவதையும் தவிர எமது வெற்றிக்கு வேறு எதுவும் உத்தரவாதமாக முடியாது.

www.tamilarangam.net



ஆம்! சிறீலங்கா ஆக்கிரமிப்பாளர்கள் தமது அடக்கு முறைக்கரங்களை அகல விரிக்கையில் இங்குள்ள மக்களின் ஒற்றுமையும் மேலும், மேலும் இறுகி வருகிறது.

எமது மக்களிடம் இப்போது ஒற்றுமையைப் பற்றிப் – பேசி அரசியல் வியாபாரம் நடத்த கூட்டணி போன்ற வியாபாரத் தலைமைகள் இல்லை என்பது உண்மை தான்.

ஆனால் எமது மக்கள் தாங்களாகவே ஒற்றுமைபற்றியும் ஒற்றுமையின் அவசியம் பற்றியும், சரியான தொரு புட்ரசிகரத் தலைமையின் தேவை பற்றியும் உணர்ந்துள்ளனர்.

எமது நியாயமான போராட்டத்தைப் பயங்கரவாதிகளது போராட்டமாக சிறுமைப் படுத்திக் காட்ட எதிரிகள் தமது பிரச்சாரச் சாதனங்களைப் பிரயோகிக்கிறார்கள்.

எமது போரட்டத்தின் குரல் வளையை நெரிக்க ஆயுதப் படைகளை மேலும்நவீனமயமாக்க சர்வதேசக்கொள்ளையராம் ஏகாதிபத்திய உதவியும் பெறுகிறார்ாள்.

நாமும் எமது புரட்சிகர விடுதலைப் போராட்டத்தின் நியாயபூர்வமான காரணங்களை சர்வதேச அரங்கில் வெளிப் படுத்தி, புரட்சிகர, ஜனநாயக சக்திகளது ஆதரவை நமக் காகத் திரட்டவேண்டும்.

இந்தப் பணியை சர்வதேசமெங்குமுள்ள எமது தேசமக்கள் சிறப்பாகச் செய்திடமுடியும். செய்திடவும் வேண்டும். ஆங்காங்கே கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், கண் காட்சிகள் மூலம் ஈழப்போராட்ட விளக்கத்தை எடுத்துச் செல்லுங்கள். உங்களுக்குத் தேவைப்படும் உதவிக்கு எமது தலைமையான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி யிடமோ, அல்லது ஈழமக்கள் செய்தித்தொடர்பு நிலையமுடனோநீங்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

இரண்டாவதாக, எமது புரட்சிகரப் பணிகளைத் தீவிரமாக முடுக்கிவிடவும் ஈழமக்களிடம் இருந்து திரட்டப் படும் நிதிவசதி பட்டும் போதுமானதாகிவிடாது.

www.tamilarangam.net



எமது போராட்டத்தின் முன்னோக்கிய வளர்ச்சி அதிகரிக்க அதிகரிக்க எமக்கு நிதித்தேவையும் அதிகரிக்கத்தான் செய்கிறது. நிதி நெருக்கடியால் எமது புரட்சிகரப் பணிகள் முடங்கிட விடுவது தவிர்க்கப்பட வேண்டும்.

மக்கள் மத்தியில் அரசியல் வேலை நடத்தும் வெகுஜனப் பிரிவுகளது பணிகள் மேலும் தீவிரமாக்கப்பட்டு பரந்துபட்ட மக்களிடையே கிளர்ச்சிப் பிரச்சாரத்தை நாம் முடுக்கி விடத் தீர்மானித்துள்ளோம்.

எமது பிரச்சார வெளியீடுகளை ஒழுங்கு முறையில் வெளிக்கொணரவும் முடிவெடுத்துள்ளோம்.

எனவே நிதித்தேவையின் நெருக்கடி தீர சர்வதேசமெங்கும் வாழும் நீங்கள் உதவிட முடியும், உதவவும் வேண்டும்.

ஈழ எல்லைகளுக்கப்பால் உள்ள ஈழதேசத்தவர்கள் தமது கடமையை உணர்ந்து காரியமாற்றத் தொடங்குவது என்பது எமது புரட்சிப் போருக்கு உந்துதலைத்தந்திடும் என்பதில் அய்யமில்லை.

ஏற்கனவே இத்தகைய பணிகளில் ஈடுபட்டுள்ளோருக்குப் புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு இனிமேலும் ஈடுபடப் போகும் கடமை உணரும் ஈழதேசத்தவருக்கும் பணி தொடர புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

**நாம்—ஈழமக்கள்**
**நமது மொழி—தமிழ்**
**நமது நாடு—ஈழம்**

★

www.tamilarangam.net

# ★ சுரண்டல் வர்க்கம் சுடுகாடாக்கும் உலகத்தை சோசலிசம் மட்டுமே வளப்படுத்தும்!

புரட்சிவாதிகள் என்றால் யார்? அவர்கள் யாரை எதிர்த்துச் சமரசமின்றிப் போராடுகிறார்கள்? [புரட்சியாளர்கள் ஈவிரக்கமற்ற தமது பகைவர்களை எதிர்த்து நடத்தும் போராட்டத்திற்கு உரிய மா வலிமையை எங்கிருந்து பெறுகிறார்கள்?

இதற்கான விளக்கங்களை சோவியத் புரட்சிகர இலக்கியமான தாய் நாவலில் வரும் ஒரு பகுதி சிறப்பாக வெளிப்படுத்துகிறது. சோவியத் சோசலிச யதார்த்த இலக்கிய வாதியான தோழர் மாக்சீம் கார்க்கி தாய் நாவலில் வரும் பாவெஸ் எனும் கதாபாத்திரம் மூலம் புரட்சியாளர்கள் என்றால் யார் என்பதைப் பிரகடனப்படுத்துகிறார். அந்தப் பகுதியை இங்கே பிரசுரிக்கிறோம்.

★

''நாங்கள் சோசலிஸ்டுகள்! அதாவது தனி நபர் சொத்துரிமைக்கு — சொத்துரிமையின் பேரால் மக்கள் சமுதாயத்தைப் பிளவுபடுத்தி, மக்களை ஒருவருக்கொருவர் எதிராகத் தூண்டி மோதவிட்டு, தமது நல உரிமைகளின் மீது வெறுப்புணர்ச்சியை உண்டாக்கும் சமுதாய அமைப்புக்கு — நாங்கள் எதிரிகள். இந்தச் சொத்துரிமைச் சமுதாய அமைப்பு இந்த வெறுப்புணர்ச்சியை மூடி மறைப்பதற்காக, அல்லது அதை ஏற்றுக் கொள்வதற்காக, பொய்மைக்கும், புனை சுருட்டுக்கும் ஆளாகி, மக்கள் அனைவரையும் பொய்களுக்கும், மாய்மாலத்துக்கும், தீய கிரியைகளுக்கும் ஆளாக்கி விடுகிறது. தான் செழிப்பாக வாழ வேண்டும் என்பதற்காக, மனிதப் பிறவியை ஒரு கருவியாகப் பயன்படுத்த எண்ணும் சமுதாயத்தை நாங்கள் மனிதத் தன்மையற்றதாக, எங்களது நல உரிமைகளின் எதிரியாகக் கருதுகிறோம். அந்தச் சமுதாயத்தின் பொய்யான, இரண்டு பட்ட ஒழுக்க நெறியை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது. தனி மனிதனிடம் அந்தச் சமுதாயம் காட்டும் குரூரத்தையும் வக்கிர புத்தியையும் நாங்கள் வெறுத்துத் தள்ளுகிறோம். அந்த

www.tamilarangam.net



மாதிரியான சமுதாய அமைப்பு தனி மனிதனின் உடலின் மீதும் உள்ளத்தின் மீதும் சுமத்தியிருக்கும் சகலவிதமான அடிமைத்தனத்தையும், சுயநலத்தின் பேராசையால் மனிதர்களை நசுக்கிப் பிழியும் சகல விதமான சாதனங்களையும் நாங்கள் எதிர்த்துப் போராட விரும்புகிறோம், எதிர்த்துப் போராடவே செய்வோம். நாங்கள் தொழிலாளர்கள். சிறு குழந்தைகளின் விளையாட்டுக் கருவிகளிலிருந்து பிரமாண்டமான யந்திர சாதனங் கள் வரை சகலவற்றையும் எங்கள் உழைப்பின் மூலமே நாங்கள் உலகத்துக்குப் படைத்துக் கொடுக்கிறோம். ஆனால், எங்களது மனித கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் உரிமையைக் கூடப் பறிகொடுத்தவர்களும் நாங்கள் தான். சொந்த நலன் களை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒவ்வொருவரும் எங் களைத் தங்கள் கைக்கருவிகளாகப் பயன்படுத்திக்கொள்ள முடி கிறது. ஆனால் தற்போது நாங்கள் எங்கள் கைகளிலேயே சகல அதிகாரமும் இருக்க வேண்டும் என்பதற்காக, இறுதியாய் அந்த அதிகாரத்தை அடையும் அளவுக்குச் சுதந்திரம் பெற விரும்பு கிறோம். எங்களது கோஷங்கள் மிகவும் தெளிவானவை: 'தனிச் சொத்துரிமை ஒழிக!' 'உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் மக்கள் கையில்!' 'அதிகாரம் அனைத்தும் மக்களிடம்' 'உழைப்பது ஒவ்வொருவருக்கும் கடமை!' இவைதாம் எங்கள் கோஷங்கள். இவற்றிலிருந்து நாங்கள் வெறும் கலகக்காரர்கள் அல்ல என் பதை நீங்கள் கண்டு கொள்ளலாம்!"

"நாங்கள் அனைவரும் புரட்சிக்காரர்கள். ஒருசிலர் வேலை வாங்கவும் மற்றவர்கள் அனைவரும் வேலை செய்யவுமாக இருக்கின்ற நாள்வரையிலும், நாங்களும் புரட்சிக்காரர் களாகவே இருப்போம். யாருடைய நலன்களைக் காப்பாற்று வதற்காக நீங்கள் அனைவரும் ஏவலாளிகளாக இருக்கிறீர் களோ, அவர்களது சமுதாயத்தோடு எந்தவிதத்திலும் ஒத்துப் போகாத எதிரிகள் நாங்கள். அந்தச் சமுதாயத்துக்கும், உங்களுக்கும் எதிரிகள் நாங்கள். எங்களது போராட்டத்தில் நாங்கள் வெற்றி காணும்வரை நமக்குள் எந்தவிதமான சமா தானமும் ஏற்படப்போவதில்லை. தொழிலாளர்களாகிய நாங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவோம்! உங்கள் எஜமானர் களோ, அவர்கள் நினைத்துக் கொண்டிருப்பது போல பலசாலி கள் ஒன்றுமில்லை! தனி நபர் சொத்துக்களைப் பாதுகாப்பதற்

www.tamilarangam.net



காகவும், பெருக்கிக் குவிப்பதற்காகவும் தங்களது அதிகாரத்தால், லட்சக்கணக்கான மக்களை அடிமைப் படுத்தவும் கொன்று குவிப்பதற்காகவும் உதவிக்கொண்டிருக்கும் தனிப்பட்ட சொத்துரிமைதான், — எங்கள் மீது ஆட்சி செலுத்த அவர்களுக்குப் பலம் தரும் அந்தச் சக்திதான் — அவர்களுக்குள்ளாகவே தகராறுகளைக் கிளப்பிவிடுகிறது: அந்தச் சொத்துரிமை அவர்களை உடல் பூர்வமாகவும், உள்ள பூர்வமாகவும் சீர்குலைத்து வருகிறது. தனிச் சொத்துரிமையைக் காப்பது என்பது சாமான்யமான காரியம் அல்ல. உண்மையைச் சொல்லப் போனால், எங்களது எஜமானர்களாயிருக்கும் நீங்கள் அனைவரும் எங்களையும்விட மோசமான அடிமைகளாயிருக்கிறீர்கள்: நாங்கள் உடல் பூர்வமாய்த் தான் அடிமையானோம்; நீங்களோ உள்ள பூர்வமாகவே அடிமையாகி விட்டீர்கள்! உங்களை உள்ள பூர்வமாகக் கொன்றுவிட்ட நுகக்காலிலிருந்து, வெறுப்பு விருப்பு பழக்கதோஷமென்னும் நுகத்தடியின் பளுவிலிருந்து, உங்களை விடுவித்துக் கொள்வதற்கு நீங்கள் சக்தியற்றுப் போய்விட்டீர்கள். ஆனால் நாங்கள் சுதந்திரமான உள்ளத்தோடிருப்பதை எந்த சக்தியுமே கட்டுப்படுத்தவில்லை. உங்களது இஷ்டத்துக்கு மாறாக, நீங்கள் எங்களது உணர்விலே பெய்து கொண்டிருக்கும் முறிவு மருந்துகளாலேயே, நீங்கள் எங்களுக்கு ஊட்டிவரும் விஷங்களெல்லாம் வலுவற்று முறிந்து போகின்றன. எங்களது சத்திய தரிசனம் எந்தவிதத் தடையுமின்றி, அசுர வேகத்தோடு வளர்ந்தோங்கிக் கொண்டிருக்கிறது; மேலும் அந்த சத்தியம் நல்ல மனிதர்களை — உங்களது சமூகத்திலேயே மனத்தைப் பறிகொடுக்காது தப்பிப் பிழைத்த நல்லவர்களை எல்லோரையும் தன்பால் கவர்ந்திழுக்கிறது. உங்களது வர்க்கத்தை நேர்மையான ஒழுங்குமுறையோடு பாதுகாப்பதற்கு உங்களிடம் ஒருவரும் இல்லையென்பதை நீங்களே பாருங்கள்! சரித்திர பூர்வமான நியாயத்தின் அழுத்தச் சக்தியிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு நீங்கள் கூறிய சகல வாதப் பிரதிவாதங்களும் வாய் சோர்ந்து வலி விழந்து வாடி விழுந்ததை இப்போது நீங்களே கண்டீர்கள். எந்த விதமான புதிய சிந்தனைகளையும் உங்களால் படைக்க இயலாது. ஆத்மார்த்த விஷயத்தில் நீங்கள் ஆண்மையற்று மலடுதட்டிப் போய்விட்டீர்கள்.

ஆனால் எங்கள் கருத்துக்களோ என்றென்றும் வளர்ந்தோங்குகின்றன; என்றென்றும் அணையாத தூண்டா மணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விளக்காய்ப்பிரகாசமுற்றோங்குகின்றன; மக்கள் அனைவருக்கும் உணர்ச்சி ஊட்டி, சுதந்திரப் போராட்டத்துக்காக அவர்களை ஒன்றுபடுத்தி பலம்பெற்று விளங்கச்செய்கின்றன: தொழிலாளர் வர்க்கம் சாதிக்க வேண்டிய மகத்தான சாதனையின் ஞான போதம், உலகத் தொழிலாளர்கள் அனைவரையும் ஒன்றுபட உருக்கி வார்த்து அவர்களை ஒரு மகத்தான ஏக சக்தியாக உருவாக்குகிறது: அவர்களைக் கலகலத்து உயிர்ப்பிக்கும் பெரும் சக்தியை எதிர்த்துப் போராடுவதற்குக் கொடுமையையும் வெடுவெடுப்பையும் தவிர உங்களிடம் எந்தவித ஆயுதமும் இடையவே கிடையாது: ஆனால் உங்களது வக்கிரகுணமோ வெளிப்படையானது: கொடுமையோ எரிச்சல்தருவது: இன்று எங்களது கழுத்தை நெரிக்கும் கைகளே நாளைக்கு எங்களைத் தோழமையுணர்ச்சியோடு தழுவிக்கொள்வதற்காகத் தாவி வரத்தான் போகின்றன. உங்களது சக்தியே செல்வத்தைப் பெருக்க உதவும் யந்திர சக்தி. அந்தச் சக்தி உங்களைத் துண்டுபடுத்தி, இரு கூறாக்கி, நீங்களே உங்களில் ஒருவரையொருவர் கொத்திக் குதறிக் குலைபிடுங்கிச் சாவதற்குத்தான் வழி கோலிக் கொடுக்கும். ஆனால் எங்களது சக்தியோ சகல தொழிலாள மக்களின் ஒன்றுபட்ட ஐக்கிய பலத்தால் என்றென்றும் ஜீவ வேகத்தோடு வளர்ந்தோங்கிக் கொண்டிருக்கும் மனச்சாட்சியினால் இயங்கிக் கொண்டிருக்கிறது. நீங்கள் செய்வது அனைத்தும் படுமோசமான பாதகச்செயல்கள்! ஏனெனில் உங்கள் செயல்கள் அனைத்தும் மக்களை அடிமைப்படுத்துவதில் தான் முனைந்து நிற்கின்றன: உங்களது பொய்மையும், பேராசையும், குரோத வெறியும் உலகத்தில் எண்ணற்ற பிசாசுகளையும் பூதங்களையும் தான் படைத்திருக்கின்றன: அந்தப்பூதங்களும் பிசாசுகளும் மக்களைக் கோழையராக்கி விட்டன; அந்தப் பைசாச ஆதிக்கப் பிடியிலிருந்து மக்களை விடுவித்துக் காப்பாற்றுவதே எங்கள் பணி. நீங்கள் மனிதனை வாழ்க்கையினின்றும் பிய்த்துப் பிடுங்கி, அவனை அழித்துவிட்டீர்கள். நீங்கள் அழித்துச் சுடுகாடாக்கிய இந்த உலகத்தை, 'சோஷலிசம் ஒரு மகோன்னதமான மாசக்தியாக வளர்ந்து உருவாகி வளம்படுத்தும்: நிச்சயம் இது நிறைவேறத்தான் போகிறது!"


★

www.tamilarangam.net

# சர்வதேச முற்போக்கு ஜனநாயகச்சக்திகளுக்கு ஓர் அறைகூவல்!

## ஏகாதிபத்தியத்தையும், சியோனிசத்தையும் எதிர்த்து விடாது போராடுவோம்

★ செயலாளர் நாயகம் (S.G.) தோழர் பத்மநாபா ★




★ ஏகாதிபத்தியமும், சியோனிசமும் சர்வதேசமக்களால் மன்னிக்கப்பட முடியாத, தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகள்.

★ பலஸ்தீன மண்ணின் மைந்தர்களை அகதிகளாக்கி, அவர்களைப் படுகொலை செய்யும் இஸ்ரேல் சியோனிசம் ஏகாதிபத்தியங்களின் நலன்காக்கும் ஏவல் நாய்.

பலஸ்தீனத்தின் சுதந்திரத்தைப் பறித்து, பலஸ்தீன மக்களை அகதிகளாக்கி, அவர்கள் அகதிகளாய் வாழும் முகாம்கள் மீது குண்டுமாரி பொழியும் கொடூரமிக்க சியோனிச இஸ்ரேலை சர்வதேசமெங்குமுள்ள முற்போக்கு, ஜனநாயக அரசுகள் புறக்கணித்து வருகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேசமக்களும் சோசலிச நாடுகளும், தேசிய ஜனநாயக அரசுகளும் செயல்பூர்வமான ஆதரவை வழங்கி வருகின்றனர்.

கடந்த காலங்களில் சிறீலங்கா பிற்போக்குத்தன அரசுகளும் இஸ்ரேல் சியோனிசத்தைப் புறக்கணிப்பது போலவே நடந்து கொண்டன. இவ்வாறு நடந்து கொள்வதன் மூலம் இலங்கையில் வாழும் (சிறீலங்கா+ஈழம்) இஸ்லாமிய மத தமிழ்பேசும் மக்களை ஏனைய தமிழ் பேசும் மக்களிடம் இருந்து பிரித்து விடுவதும், அரபு நாடுகளிடமிருந்து சில உதவிகளைப் பெற்றுக்கொள்வதுமே சிறீலங்கா இனவாத ஆளும் வர்க்கங்களின் நோக்கமாக இருந்தது.

ஆனால் ஈழம் மீதான சிறீலங்கா இனவாத அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் முற்றிலும் இஸ்ரேலிய பாணியிலேயே நடைபெற்றன. இஸ்ரேல் சியோனிசம் போலவே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்களுடன் சிறீலங்கா ஆளும் வர்க்கத்தின் நலன்களும் விசுவாசமான உடன்பாடு கொண்டதாகவே இருந்தது.

---

## சியோனிஸ்ட்டுகள் யார்?

எங்கள் தாயகத்தைத் தங்கள் நாடாக்கிக் கொண்டு, எங்கள் சம வெளிகளைத் தங்கள் கால் நடைகளின் மேய்ச்சல் நிலமாக்கிக் கொண்டு, நாங்கள் வளர்த்த மரங்களில் அவர்கள் பழம் பறித்துக்கொண்டு, எங்களை விரட்டியடித்து விட்டனர்... இதோ எனது கையில் ஆலிவ் மரக்கிளையையும், விடுதலை வீரனுக்குரிய துப்பாக்கியையும் ஏந்தி வந்திருக்கிறேன்.

— தோழர் யாசீர் அராபத்



www.tamilarangam.net



ஆனால் இன்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலைப் போராட்டம் சர்வதேச புரட்சிகர சக்திகளது ஆதரவுடன் ஈழத்தின் புரட்சிகரத் தலைமையால் உறுதியுடன் முன்னெடுக்கப் படுவதும், ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஈழமக்களும், ஈழத்தின் புரட்சிகரத் தலைமையும் முன்னிற்பதும் சிறீலங்கா அரசுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் ஈழ விடுதலை பெறுவதன் மூலம் அதுவும் ஈழத்தின் புரட்சிகரத்தலைமை ஈழப்புரட்சியை முன்னெடுக்குமாயின் இந்துமகா சமுத்திரப் பிராந்தியத்தில் தனது நலன்களுக்கு ஆபத்து ஏற்படும் என்பதாலும், சிறீலங்கா அரசுக்கு முன்னெப்போதையும் விட உக்கிரமான ஆதரவை வழங்கி வருகிறது.

இதன் ஒரு கட்டமாகவே ஏகாதிபத்திய அமெரிக்காவின் ஏவல் நாயான இஸ்ரேல் நாட்டின் உதவியை சிறீலங்கா படு கொலை அரசு இன்று பகிரங்கமாகவே பெறும் நிலை ஏற்பட்டுள்ளது. இஸ்ரேலுக்கான அலுவலகப்பிரிவும் அமெரிக்கத் தூதரகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இன்று சிறீலங்கா அரசு பகிரங்கமாகவே சியோனிச இஸ்ரேலுடன் கைகுலுக்கிக் கொள்ளும் நிலை என்பது சர்வதேச மக்களது எதிர்ப்பையும் விட ஈழப்போராட்டத்தின் பேரலையில் இருந்து தன்னைப் பாதுகாக்கவும், இதனால் ஈழமக்களை அழித் தொழிக்கவே சிறீலங்கா அரசு குறியாய் உள்ளது என்பதும் தெளிவாகியுள்ளது.

இலங்கைவாழ் (ஈழம் & சிறீலங்கா) இஸ்லாமிய மதமக்கள் இஸ்ரேலுடன் சிறீலங்கா உறவு துண்டிக்கப்பட வேண்டும் எனத் தன்னியல்பாகவே கிளர்ந்தெழுந்து போராடுகின்றனர்.

இந்தப் போராட்டங்களைக் காட்டுமிராண்டித்தனமான முறையில் தனது கூலிப்படைகளால் அடக்கிவிட, சிறீலங்கா முயற்சி எடுக்கிறது. இஸ்லாமிய மதமக்கள் மீது முன்பு புத்தளம் பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்த வேளை, கொலை வெறி வேட்டை நடத்திய சிறீலங்கா அரசு இப்போதும் இஸ்லாமிய மதமக்களைச் சுட்டு வீழ்த்துகிறது. இந்தச் செய்திகள் வெளியே வராது தடுக்கப் பத்திரிகைத்தணிக்கை அமுலாக்கப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டுள்ளது. ஆனாலும் நாளுக்குநாள் காட்டுத்தீ போல இஸ்லாமிய மத தமிழ் பேசும் மக்கள் போராட்டம் ஈழமெங்கும் பரவிக்கொண்டிருக்கிறது.

இந்தப்போராட்டங்கள் பிற்போக்குவாத ஆளும்வர்க்கங்கள் மக்களை மதரீதியாகப் பலகாலம் பிரித்தாள முடியாது என்பதை யும், ஈழமக்கள் அனைவரும் ஒன்றுபட்டுத் தமது பகைவனுக்கு எதிராகப் போராட எழுந்து கொண்டிருப்பதையும் எடுத்துக் காட்டுகின்றன.

ஈழப்போராட்டத்திற்கு எதிராக, இஸ்ரேல் உதவி பெறப் படுவதைக் கண்டித்து எமது தலைமை அமைப்பான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் (S.G) தோழர் பத்மநாபா சர்வதேச புரட்சிகர, முற்போக்குச் சக்தி களுக்கு விடுத்துள்ள அறிக்கையைக் கீழே தருகிறோம்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பின்பலம் கொண்டு, ஈழ மக்களைப் பூண்டோடு அழித்தொழித்து ஈழத்தைப் பறித் தெடுக்க சிறீலங்கா அரசு தீவிரமாகச் செயல்படுகிறது.

ஈழப்போராட்டத்தில் அமெரிக்காவின் ஊடுருவல் எந்த அளவிற்கு உள்ளது என்பதையும் சர்வதேச அரங்கில் அம்பலப் படுத்தும் நடவடிக்கையாகவே எமது இராணுவப்பிரிவு மக்கள் விடுதலைப்படை அண்மையில் இரண்டு சி.ஐ.ஏ. உளவாளி களைக் கடத்தியது.

இப்போது சிறீலங்கா அரசானது இஸ்ரேலது நேரடி உதவி யையும் பகிரங்கமாகவே நாடியுள்ளது.

சியோனிஸ்டுக்கள் பலஸ்தீன மக்களது எதிரிகள் மட்டுமல்ல சமாதான வேட்கையும், சுதந்திர வேட்கையும் கொண்ட அனைத்து மக்களதும் எதிரிகள். விடுதலை மீது அசைக்க முடி யாது உறுதிகொண்ட நாங்கள் பலஸ்தீன மக்களது விடுதலைப் போராட்டத்திற்கு எமது ஆதரவைத் தெரிவிக்கிறோம். பலஸ்தீன மக்கள் சியோனிஸ்டுக்களால் துயரப்படும் போது நாங்களும் வேதனைப்படுகிறோம். பலஸ்தீனியர்கள் சியோனிஸ்டுக்களை எதிர்த்து வெற்றி பெறும் போது நாங்களும் பலஸ்தீனியர்கள் கொள்ளும் மகிழ்ச்சியில் எமது துன்பங்களையும் மறந்து பங்கு கொள்கிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனவே இன்றுநேற்றல்ல; என்றுமே நாங்கள் சியோனிசத்தை எமது நண்பனாகக்கருதவில்லை. அவர்கள் பலஸ்தீன மக்களது எதிரிகள் போலவே எங்களதும் எதிரிகள் ஆவர்.

எனவே சிறீலங்கா அரசுக்கு உதவிசெய்ய வரும் சியோனிஸ்டுக்களை எதிர்த்தும் நாம் எமது தேச விடுதலைக்காக விடாப்பிடியாகப் போராடுவோம்.

எனவே சிறீலங்கா அரசுக்கு உதவிசெய்ய வரும் சியோனிஸ்டுக்களை எதிர்த்தும் நாம் எமது தேச விடுதலைக்காக விடாப்பிடியாகப் போராடுவோம்.

எமக்குப்பின்னால் புரட்சிகர, முற்போக்குச்சக்திகள் துணை நிற்பார்கள் என்ற நம்பிக்கையும், அனைத்துக்கும் மேலாக எமது மக்களது யாராலும் வெல்ல முடியாத பலத்திலும் எமக்கு நம்பிக்கையுண்டு.

தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகள் மீது பொருளாதாரத் தடைவிதித்துள்ள நாடுகள், இனவெறி கொண்ட சிறீலங்கா மீதும், பொருளாதாரத் தடைவிதித்து சிறீலங்காவைப் புறக்கணிக்க வேண்டும்.

ஏகாதிபத்தியத்தையும், சியோனிசத்தையும் எதிர்த்துப் புரட்சிகர முற்போக்குச்சக்திகள் ஒன்றுபட்டு, விடாது போராடுவதன் மூலமே மனித குலத்தை அழிவின் விளிம்பிலிருந்து மீட்க முடியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிவக்குமாரன் நீடூழி வாழ்க!

**''மக்களுக்காகப் போராடி மடிவதென்பது மலையை விடக் கடினமானது, ஆனால் பாசிஸ்டுகளுக்காகப் போராடி மடிவதென்பதோ இறகை விடவும் இலேசானது.''**

1974 ம் ஆண்டு ஜூன் 5 ம் நாள் ஈழப்போராளி சிவகுமாரன் தனது சிந்தனையை நிறுத்திக் கொண்டான்.

''மலையை விடவும் கடினமான'' இந்தச் செய்தி ஈழ தேச மக்களிடையே ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஆனாலும் மக்களுக்காகப் போராடும் எந்தமனிதரும், அவர்கள் இலட்சியங்களும் எந்த மக்களுக்காக அவர்கள் போராடுகிறார்களோ அந்த மக்களிடம் நீடூழி வாழ்கின்றன.

போராளி சிவக்குமாரன் மரித்தபோதும் அவன் தூவிச் சென்ற ஆயுதப் போராட்டச் சிந்தனைப் பொறிகள் ஈழவாலிபர்கள் மத்தியில் காட்டுத்தீ போல பற்றிக்கொண்டன.

25 வருடகாலமாக ஈழ மக்களது போராட்ட உணர்வுகள் பேரலையாக பிரவாகம் எடுத்த வேளைகளில் ஈழத்தின் பிற்போக்குத்தனத் தலைமைகள் சாத்வீக அணைகட்டித் தடுத்து நிறுத்தின.

வெற்று முழக்கங்களை எழுப்பித் தனது பதாகையின் கீழ் அனைத்து ஒடுக்கப்படும் மக்களை ஒன்று திரட்டித் தமது நலன்களைக் காத்துக்கொள்ளும் பிற்போக்குத் தலைமைகள் சரியான போராட்டப் பாதையில் மக்கள் அணிதிரட்டப்படுவதை எந்த தேசத்திலும் ஏற்றுக் கொள்வதில்லை.

ஆனாலும் புறநிலையான ஒடுக்கு முறைகள் அதிகரிக்க, அதிகரிக்க இவற்றுக்கு மக்கள் நாடுகிறார்கள்.

ஈழதேசம் மீதும், ஈழமக்கள் மீதும் சிறீலங்கா அடக்குமுறையாளர் நடத்திய கொடூரமிக்க ஒடுக்கு முறைகள் ஈழ வாலிபர்களிடையே புதிய போராட்ட முறைகள் பற்றிய சிந்தனைகள் உருப்பெறக் காரணமாயின.

ஆயுத பலத்தினால் ஈழத்தை வேட்டைக்காடாக்கிய ஆக்கிரமிப்பாளர்களை ஆயுதம் ஏந்தியே சந்திக்க வேண்டும் என்கின்ற

www.tamilarangam.net



முடிவுக்கு வந்த முன்னணிப் போராளிகளில் **தோழர் சிவகுமாரன்** முக்கியமானவராகிறார்.

ஈழவரலாற்றில் ஆயுத எழுத்துக்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட திருப்பு முனையான காலகட்டத்தின் முன்னணித் தோழன் சிவக்குமாரன்.

ஆயுதப் போராட்டச் சிந்தனைகள் மீது வெறித்தனமான காழ்ப்புக்கொண்ட கூட்டணித்தலைமை சிவக்குமாரன் உருவப் படங்களைத் தனது தேர்தல் மேடைகளில் உயரே தூக்கியது.

இதன்மூலம் சிவக்குமாரன் சிந்தனை மீது ஈடுபாடு கொண்ட ஈழ வாலிபர்களைத் திருப்தி பெறச் செய்து, தனது விபச்சார அரசியலைநீடித்து நடத்தக்கூட்டணித்தலைமை திட்டமிட்டது.

**ஆனால் உருவாகியும், வளர்ந்தும் வரும் புதிய சிந்தனை களையும், புரட்சிகரச் சக்திகளையும் பிற்போக்கு வாதிகளால் தடுத்து நிறுத்த முடிவதில்லை.**

சர்வதேசப் புரட்சிகர அனுபவங்களும், ஈழமக்கள்மீது தேசப் பகைவர்களின் துப்பாக்கிக் குழாய்கள் மூலம் நீடித்த புற நிலை யான அடக்கு முறைகளும் சிவக்குமாரன் போன்றோரால் அறி முகமான ஆயுதப் போராட்டத்தைச் சரியான திசைவழியில் முன்னெடுக்க உந்துதல் ஆயின.

பரந்து பட்ட வெகு மக்களை அணிதிரட்டி, புரட்சிகர வழி நடத்துதலின் கீழ் ஆயுதப் போராட்டப் பாதையில் ஊன்றி நிற்கும் காலகட்டத்தில் பிரவேசித்துள்ள நாம், ஈழப்போராளி சிவக்குமாரனுக்கு சிகப்பு வணக்கம் செலுத்திச் சபதம் ஏற்கிறோம்.

★ **எம்மைப் பிணைத்துள்ள அனைத்து ஆதிக்க விலங்கு களையும் எமது ஒன்றுபட்ட போராட்டச் சம்மட்டிகளால் உடைத்தே தீருவோம்.**

எமக்கு முன் ஈழத்தின் மகோன்னதமான விடுதலைக்காக மரித்த தோழர்களது பதாகைகள் கீழே விழுந்து விடவில்லை; நாங்கள் அவற்றை ஏந்திச் செல்கிறோம். **எமது தியாகிகளது இலட்சியங்கள் விடுதலை பெறும் ஈழத்தில் நீடூழி வாழும்.**

★

www.tamilarangam.net




ஈழ தேச விடுதலைக்காய்
வீர மரணமடைந்த தோழர்களே!
உங்கள் கனவுகளை நிஜமாக்க
இறுதி வெற்றி வரை போராடி
வெற்றி பெறுவோம் லட்சியமாய்
நாம் வாழ்நாளாய், பரம்பரையாய்
செங்குருதி சிந்தியுழைக்கும் — எம்
நிலங்கள், எம் உழைப்பு, சுரண்டப்பட்டு
அந்த ஏக போக முதலாளிகளின்
நலன்களுக்காக — எங்கள்
இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும்
ஏகாதிபத்திய முதலாளிகளுக்கு
எதிராகப் போராடி - அங்கு
சமதர்மக் கொடியை நிலை நாட்ட
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை
முன்னணியின் தலைமையில் — எம்
மகத்தான மக்கள் விடுதலைப்
படையுடன் சேர்ந்து போராடி
சிவந்த விடியல் பிறக்கு மட்டும்
விடாப் பிடியாய்ப் போரிடுவோம்.

www.tamilarangam.net

# தோழர் லெனின் போதிக்கிறார் !



தோழர்களே உங்களது இராணுவ சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டி, மகத்தான ஒரு செஞ் சேனையை உருவாக்கி இந்த எஃகனைய போர்ப்படைகளைச் சுரண்டல்காரர் மற்றும் ஒடுக்கு பவர்களுக்கு எதிராகவும், உலக மனைத்திலுமுள்ள பிற்போக்கு வாதக் கொள்ளைக்காரர்கள் அனைவருக்கும் எதிராகவும் திருப்பி 'வெற்றி! இன்றேல் வீரமரணம் !' என்ற போர்ப் பறையுடன் தாக்கிடு வர்களானால்—எந்த ஒரு ஏகாதி பத்தியச் சக்தியும் நம்மைத் தடுத்திட இயலாது.

— தோழர் லெனின்

★

## ஓ, சிறீலங்கா நவபாசிச வெறியர்களே!

## நமது ஈழமும், நமது மக்களும் மலையைவிட உறுதியானவர்கள் !

மாக்கடலைவிட ஆழமான உணர்வுடையவர்கள்; எமது கட்சியும், அதன் மக்கள் படையும் குருதியில் நனைந்த செங் கொடிகளை உயரே தூக்கி அணிவகுத்து வருகையில்,

**ஓ, நவபாசிச வெறியர்களே !**
**உங்கள் கொலைக்கரங்கள் குலுக்கப்படாது —**
**அறுக்கப்படும் !**

★

www.tamilarangam.net

# சர்வதேசத்தில்

## பொலிசாரியோ முன்னணி!

ஆபிரிக்காவிலுள்ள சஹாராவி நாட்டுமக்கள் **பொலிசாரியோ விடுதலைமுன்னணியின்** தலைமையில்ஸ்பெயின் 'காலனியாதிக்கவாதிகளையும், மொராக்கோ நாட்டு ஆக்கிரமிப்பாளர்களையும், எதிர்த்து வீரம் செறிந்த போராட்டம் நடத்தினர்.

1976ம் ஆண்டில் சஹாராவி அரபு ஜனநாயகக் குடியரசு அமைக்கப்பட்டது. இந்த ஜனநாயகக் குடியரசை மூச்சிழக்கச் செய்து, மீண்டும் ஆக்கிரமிப்பு நடத்த மொராக்கோ ஆக்கிரமிப்பாளர்கள் நாசவேலைகளை சஹாராவி நாட்டின்மீது கட்டவிழ்த்து விடுகின்றனர்.

இந்த ஆக்கிரமிப்பாளர்கள் அமெரிக்காவின் ஆலோசகர்களுடன் சேர்ந்து 30 ஆயிரம் படைவீரர்களை அனுப்பித் தமது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்காக சஹாராவி நாட்டைச் சுற்றி வளைத்துள்ளனர்.

இந்த ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து சஹாராவி நாட்டின் சுயாதிபத்தியத்தைக்காக்க பொலிசாரியோ விடுதலை முன்னணி போராடி வருகிறது.

சஹாராவி நாட்டுமக்கள் கடந்த மேமாதம் 20ம் திகதி தமது நாட்டின் விடுதலைக்காகப் போராடிய **பொலிசாரியோ விடுதலை முன்னணியின்** 11வது ஆண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடியதுடன், ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக விட்டுக்கொடாது போராடும் சங்கற்பமும் பூண்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அமெரிக்க-இஸ்ரேலிய இராணுவ ஒத்துழைப்பு !

மத்தியகிழக்கில் நிலவும் பதட்ட நிலையைத் தொடர்ந்து பேணிக்காத்து, தனது கொள்ளைக்கார நலன்களை மேம்படுத்த அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஏராளமான இராணுவ, பொருளாதார உதவிகளை வழங்கி வருகிறது.

இந்த ஆண்டு அமெரிக்கா, இஸ்ரேலுக்கு வழங்கியுள்ள நிதியுதவி 270 கோடி டாலராகும். அடுத்த ஆண்டு இது 225 கோடி டாலராக இருக்கும் எனத் தெரியவருகிறது.

இந்த நிதியுதவிகளில் 60 சதவிகிதம் இஸ்ரேலிய சியோனிச இராணுவத்தின் அபிவிருத்திக்குச் செலவிடப்படுகிறது.

1985ம் ஆண்டு மீண்டும் 270 கோடி டாலர் தனக்குக் கிடைக்கும் என இஸ்ரேல் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இந்த நிதியுதவிகள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையில்லாமலேயே இஸ்ரேலை, அதன் இராணுவ வலிமையைப் பலமாக்க ஏகாதிபத்திய அமெரிக்கக் கொள்ளையரால் வழங்கப்படுகிறது.

★

# நிக்காரகுவா மீது யுத்த அபாயம்

புரட்சிகர நிக்காரகுவா மீது அமெரிக்கா தனது உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. மூலம் நிக்காரகுவாவின் அருகில் உள்ள ஹாண்டுராஸ் தீவைத்தளமாக வைத்து எதிர்ப்புரட்சிகர நடவடிக்கைகளை ஏவிவருகிறது. நிக்காரகுவாவிலுள்ள எதிர்ப் புரட்சியாளர்களுக்கு சி.ஐ.ஏ உதவி வருகிறது. நிக்காரகுவாவின் வடபகுதியில் கடுமையான தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப் பட்டுள்ளன. இப்போது நிக்காரகுவா மீது அமெரிக்காவே நேரடியாக ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்தும் அபாயம் நிலவுகிறது! கிரனடா நாடுமீது ஆக்கிரமிப்புச் செய்துள்ள அமெரிக்கா நிக்காரகுவாமீதும் குறிவைத்துப்பாயலாம் எனக்கருதப்படுகிறது. இதனால் இவ்வாண்டு நடைபெற இருந்த நிக்காரகுவா நாட்டின் ஜனாதிபதி, மற்றும் நாடாளுமன்றத்திற்கான தேர்தல்களை நடத்த இயலாது இருப்பதாக நிக்காரகுவா தேசபக்த புரட்சிகர முன்னணி அறிவித்துள்ளது.

★

www.tamilarangam.net

6-ம் பக்க தொடர்ச்சி...

## சி. ஐ. ஏ. உளவாளிகள்

கடத்தல் நிகழ்வு பூரண வெற்றியாகும். ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான ஈட்டி முனைகளில் ஒன்றான ஈழப்புரட்சியின் ஓங்கிய வளர்ச்சிக்கு இது ஓர் உந்துதல் முனையாகும்.

அதே சமயம் எமது பாசமிகு தோழர்களையும் சக போராளி களையும் (அவர்கள் எந்த இயக்கத்தவர்களாயினும்) மீட்க முடியாமல் போனது வருந்தத்தக்கதே.

எமது தோழர்களுக்கும், சகபோராளிகளுக்கும் செய்யப்படும் உடல் வதைகளுக்கு சிறீலங்கா ஆக்கிரமிப்பாளர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

மனிதாபிமானம் என்றால் என்ன என்பதை மனித மிருகங்களான தேச எதிரிகள் புரிந்துகொள்ளத் தொடர்ந்தும் தவறினால் இனிமேல் ஏற்படப்போகும் விளைவுகள் கடினமான தாகவே இருக்கும்.

4000 கூலிப்பட்டாளத்தை அனுப்பினால் என்ன 40,000 கூலிப்பட்டாளத்தை அனுப்பினால் என்ன—எம்மை எதுவும் செய்ய முடியாது.

ஏனெனில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி திடீரென வானத்தில் இருந்து குதித்துச் சாகசம் புரியும் அமைப்பல்ல. நீண்ட காலமாக தனது வெகுஜனப்பிரிவுகள் மூலம் மக்களிடம் ஆழமான அரசியல் பணி நடத்தி இன்று மக்களிடம் வேரூன்றியுள்ள புரட்சிகர அமைப்பாகும்.

இதை சிறீலங்கா அரசு மட்டுமன்றி, துப்பாக்கிகள் மட்டும் இருந்தால் போதும் மக்கள் சொல்கிறபடி நடப்பார்கள் எனக் குருட்டுத்தன முறையில் சிந்திப்பவர்களும் உணர்ந்து கொண்டிருப்பார்கள்.

இனிமேல் ஈழமக்களைக் கொன்று குவிக்கும் கொலைவெறி அரசு சிந்தித்துச் செயல்பட வேண்டும் என எச்சரிக்கிறோம். ஏனெனில் எதிர்காலம் ஈழத்தின் புரட்சிகரத் தலைமைக்கும், அதன் தலைமையில் முன்னேறும் ஈழ மக்களுக்கும் உரியது.

**★ எமது சக்தி மக்கள் சக்தி!**

**★ எமது பாதை புரட்சிப் பாதை!!**

www.tamilarangam.net

# உணர்வில் எழுந்த நெஞ்சுத்துணிவு!

அண்ணா மிரட்டுகிறார், அப்பா, அம்மா தடுக்கிறார்கள். அரசியல் வேலை செய்ய விடுகிறார்களில்லை. அதனால் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறது என்று நீ எழுதியிருந்தாய். அவர்கள் அப்படித்தான் செய்வார்கள். சொல்வார்கள். ஆனால் ஒன்றை மட்டும் உனது சிந்தனைக்கு முன் வைக்கிறேன். பல பெண்கள் தங்கள் பெற்றோர்களைக் கேட்டா அண்ணாக்களின் அனுமதி பெற்றா காதலிக்கிறார்கள். தாய் தந்தை சகோதரர்களுடைய விருப்பம் இல்லாமலே ஒரு பெண் தான் விரும்பிய ஒருவரைக் காதலிக்கிறாள். யார் தடுத்தாலென்ன மிரட்டினாலென்ன, அடித்தாலென்ன, உதைத்தாலென்ன, ஏசினாலென்ன தனது எதிர்கால வாழ்வை நிர்ணயிப்பதற்கான தனது உரிமைக்காகப் போராடுகிறாள். அதற்காக அவள் எந்தத் துன்பத்தையும் தாங்கிக்கொள்கிறாள். ஏன் சாப்பிடாது கூடக் கிடக்கிறாள். தற்கொலை செய்து செத்துவிடுவேனென்று கூடப்பயமுறுத்துகிறாள். ஏன் சிலர் துரதிஷ்டவசமாகத் தற்கொலை கூடச் செய்து கொள்கிறார்கள் அல்லது வீட்டை விட்டே காதலனோடு ஓடி விடுகிறார்கள். இவ்வளவிற்கு அவளுக்கு எங்கிருந்து அந்த நெஞ்சுத்துணிவு பிறந்தது? யார் அவளுடைய நெஞ்சத்தில் தைரியத்தைப் பதித்தார்கள்? அது அவளுடைய உணர்வு தனது எதிர்கால வாழ்வை நிர்ணயிப்பதற்கான அவளுக்குள்ள உரிமையின் போராட்ட உணர்வு. அந்த உணர்வில் எழுந்த நெஞ்சுத்துணிவு, தைரியம் அது. அதையாரும் அவளுக்கு ஊட்டியதில்லை. அது அவளுக்கு ஏற்பட்ட தேவையில் இருந்து பிறந்தது.

அதே போல இன்றைய சூழ்நிலையில் உனக்கு வேண்டியது விடுதலை. வர்க்க ஒடுக்குமுறை, ஆண் ஆதிக்க ஒடுக்குமுறை, இன ஒடுக்குமுறை போன்றவைகளால் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்களில் இருந்து விடுதலை பெற வேண்டுமென்றால் ஈழதேச விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் கலந்து கொள்ள வேண்டும். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட உனக்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமையை யார் பறித்தாலும் அதற்காக நீ போராடு உனது வீடாக இருந்தாலென்ன நீ வாழும் சமூகமாக இருந்தாலென்ன நீ போராட வேண்டும். நீ உனது உரிமைக்காகப் போராடவில்லையென்றால் உனக்கு விடுதலை இல்லை.

— செந்தணலிருந்து

www.tamilarangam.net

# எழுமின் ஈழமக்களே! விழிமின்!!!

நாங்கள் கடுமையான பாதை வழியாக
எமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்
தீர்மானகரமான ஆயுதப்போராட்டதில் முன்னேறவேண்டும்.
எம்மைச் சுற்றியும், எமக்கு முன்னேயும்,
ஆயுதம் தரித்தவாறு அரக்கன் போல் காட்சியளிக்கும்
பாசிச மிருகங்கள் குண்டுகளைப் பொழிந்தபடி
குரூரமாகப் புன்னகை புரிந்தவாறு நிற்கின்றனர்;
**ஆனாலும் எமது அன்பிற்கினிய வீரமிகு மக்களே**
**நாங்கள் எமது வலிமைகளைத் திரட்டி ஒன்றுபட்டு**
**புரட்சிகரத் தலைமையின் பதாகையின்கீழ்திரண்டுவிட்டால்**
**அரக்கன்போல் தோன்றும் எதிரிகள்**
**உன்மையில் மண்பொம்மைகள் தான் என்பதையும்**
**பலம்பொருந்தியவர்களும், சகலவற்றையும் தீர்மானிப்பவர்களும்**
**நாங்கள் மட்டுமே என்பதையும் உணர்வோம்;**

## அன்பிற்கினிய ஈழமக்களே!

மலையை விட உறுதியும், மாகடலைவிட ஆழமான விடுதலை உணர்வும்
கொண்ட எமது புரட்சிகரப் படைவரிசை
முன்னேறும் போது, அவர்கள் எமது தாயகத்தை
உடைத்துக் காயப்படுத்தும் கோழைகள்
பின்வாங்கத் தொடங்குவர்.
இன்று முன்னேறித் தாக்கும் அவர்கள்
தம்மைக்காத்துக் கொள்ளப் பின்வாங்குவர்;
எனவே எமது நேசமிகு மக்களே
**எல்லாம் வல்லவர்களாகிய நீங்கள் — இனியும்**
பார்வையாளர்களாக உங்கள் மாவலிமை அறியாது
ஒதுங்கிநில்லாது போர்க்களப் பாதைக்கு
**புரட்சிகர தலைமையின் ஆணையின்கீழ்**
விடுதலையை சிருஷ்டிக்க, அடிமைச்சங்கிலிகளைப்
பொடியாக்கப் புறப்பட்டு வாருங்கள்

www.tamilarangam.net



# பாசமிகு மக்களே !

கடந்த காலங்களில் என்ன நடந்தது
வாக்குகளைப் போட்டுவிட்டு
மேடை முழக்கங்களால் தம்மைக் கதாநாயகர்களாகக்
காட்டிக்கொண்ட அப்புக்காத்து அரசியல்வாதிகள்
ஈழவிடுதலையைப் பெற்றுத்தருவர் என
எதிர்பார்த்து இருந்தீர்கள்.
கத்திஇன்றி இரத்தம்இன்றி யுத்தம் நடத்துவோம்
என்றவர்கள் தளபதிகள் போல்
மைக்குகள் முன் நின்றும், கல்லறைகளில் நின்றும்
உரத்த குரல்களில் வீரசபதம் ஏற்றனர்.
ஆனால் தேர்தல் திருவிழா முடிய
சிறீலங்கா கொலை பாதக அரசு
இனப்படுகொலை விழா நடத்தி மகிழ்ந்தது.
துப்பாக்கி, கத்தியை நீங்கள் தூக்கவில்லை.
ஆனால் உங்கள் உறவினர்கள் அயலவர்கள்
இதயங்களில் எதிரிப்படையின்
துப்பாக்கிகள் கத்தியைப் பாய்ச்சின
ஈழதேசம் குருதியில் குளித்தது.
கத்தியின்றி யுத்தம் நடத்த வாக்கு வேண்டிய
ஓலமிடும் கூட்டத்தால் நிராயுதபாணிகளான
ஈழமக்கள் பகைவர்களால் மிலேசத்தனமாய் வேட்டையாடப்
பட்டனர்;
மீண்டும் புதிய முழக்கங்கள்
இவை எமது வாலிபர்களது துப்பாக்கிவேட்டு ஓசைகள்
மக்கள் எம்மை ஆதரித்தால் போதும்
போராட்டத்தில் பங்காளிகளாக மாறிவிடத் தேவையில்லை
ஆனால் நாம்மட்டும் எதிரியை ஒருகைபார்ப்போம்;
''இரண்டு காலையும் அகலவைத்து''ச் சுடுவதில்
நாங்கள் வல்லவர்கள் என்றெல்லாம்
இந்தவேட்டு ஓசை கிளப்பியவர்கள்
உங்கள் செவிகளுக்குச் செய்தி அனுப்பினர்.
நீங்களும் தெம்பாய் இருந்தீர்கள்
ஆனால் உங்களை வீடுகளில் இருக்க
இனவாத அரசின் கூலிப்படைகள் அனுமதிக்கவில்லை;
வீடுபுகுந்து கொலை வேட்டை நடத்தின.

www.tamilarangam.net



''இரண்டு காலையும் அகல வைத்துச் சுடும்''
ஜேம்ஸ்பாண்ட் நாயகர்கள்
உங்களுக்கு மட்டும் ஆயுதப்பயிற்சி தரவில்லை.
ஏனெனில் அவர்களோ சுடுவது 'தமக்கே உரிய பாணி' என்றனர்.
எனவே ''காட்டின் நிசப்தத்தில்'' அதிரடிப் பயிற்சி பெற்ற
ஈழத்தின் ஜேம்ஸ் பாண்டுகள் திடீரெனக் குதித்து
தேச எதிரிகளைச் சங்காரம் செய்வர்.
எனக் காத்திருந்தீர்கள். வில்லனால் கற்பழிக்கப்படும்
கதாநாயகியைக் காக்க! கதாநாயகன் வருவான் என எதிர்
பார்க்கும்
சினிமா ரசிகர்களின் எதிர்பார்ப்புபோல காத்திருந்தீர்கள்.
ஆனால் அவர்களோ இழப்புக்கள் சகஜம்
நாங்கள் மீண்டும் தோன்றுவோம். எதிரிகளை ஒருகை
பார்ப்போம் என்றனர்.
பழிவாங்கும் சபதம் எடுத்து விட்டதாய் பிரசுரம் விட்டனர்.
ஆம் மீண்டும் ஓர் தாக்குதல். பின் ஓடிச்சென்று
''காட்டு நிசப்தத்தில்'' சினிமா கீதம்
''அதோ... அந்தப் பறவைபோல வாழ வேண்டும்.''
எதிரிகளோ மீண்டும் பதிலுக்கு முன்னேறித் தாக்கினர்.
பல நூறு மக்கள்—
போலிமாயைகளால்இயக்கங்கள் உண்டுபார்த்துக்கொளளும் என்று
போராட்டத்தில் பங்காளிகளாக இல்லாத அப்பாவி மக்கள்
குருதி சிந்தினர்.
மீண்டும் 'தமக்கே உரிய பாணியில்' அதே பல்லவி—
''இழப்புகள் சகஜம்.''

## நேசமிகு ஈழமக்களே!

கூட்டணிக் கும்பல், மக்களது உணர்வுகளைக் கண்டு
அஞ்சிப் பின்வாங்கி எதிரியுடன் சமரசமடைந்த
வலதுசாரி கும்பல் என்றால்
எமது 'சுடுவதில் வல்ல' வாலிபர்களோ
மக்களைப் போராட்டத்திற்குப் பக்குவப்படுத்தாது
மக்களின் வலிமையையும் உணராது
மக்கள் முன்னேறும் முன்பே அதிக தூரம்
முன்னே ஓடிவிடும் அவசரத்தனமான தீவிரத்தனங்களின்
— உரிமையாளர்

www.tamilarangam.net



இந்த இரு பிரிவினரும் புரட்சிக்குத் தீங்கிழைக்கின்றனர். பின்னவர்களுக்கு ஒரு வேளை விடுதலையில் விசுவாசம் இருந்தாலும் இவர்களது தெளிவின்மை புரட்சிக்கு எதிரான எதிர்ப்புரட்சிகர நடவடிக்கையாகவே உள்ளது.

## வீரமிகு ஈழமக்களே!

ஆயுதங்கள் எமக்கு அவசியமானவை
இன்று எமக்கு அதிக அளவு ஆயுதங்கள் தேவை தான்
ஆனால் மக்கள் சக்தி திரண்டெளவில்லையானால்
ஆயுதங்கள் இருந்தும் பலன் இல்லை.
ஆயுத வலிமை இருந்தும் தோற்கடிக்கப்படும்
ஏகாதிபத்தியங்கள் மக்கள் சக்தியின்
ஆதரவு இன்மையால் அன்றோ தோல்வியடைகின்றன.
எமது எதிரிகளுக்கும் நவீன ஆயுதம்உண்டு.
ஏகாதிபத்தியத்தினதும், இஸ்ரேலிய நாசகாரர்களதும்
பின் பலம் உண்டு.
எனவே ஆயுதங்கள் தேவைதான்
ஆனால் புரட்சியின் வெற்றியைத் தீர்மானிக்கப் போகின்ற
தீர்மானகரமானவர்கள், அனைத்தும் வல்லவர்கள்
பாசமிகு மக்களே! நீங்கள் மட்டுமேதான்.
எனவே புரட்சிகரத் தலைமையின்
வெகுஜனப் படைப்பிரிவுகளிலும், ஆயுதப்படையிலும்
அணி அணியாய் இணைந்திடுங்கள்.
எமது வலிமையைப் பகைவருக்கு உணர்த்துவோம்

# இறுதி வெற்றி வரை போராடுவோம்!

★

**தோழர்களே!** உங்கள் விமர்சனங்கள், முற்போக்கு ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம். ஆக்கங்களை திருத்தவும், செழுமையாக்கவும் பத்திரிகைக் கமிட்டிக்கு அதிகாரம் உண்டு.

**ஓவியங்கள்—தோழர் சேய்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

EELAM PEOPLES' INFORMATION CENTRE
ஈழ மக்கள் செய்தித்தொடர்பு நிலையம்
B.M.BOX 1738,
LONDON, WC1N.3XX
U.K.
POST BAG 5551
MADRAS. 600094.
INDIA.
EPIC

## எம்மிடம் கிடைக்கும் புரட்சிகர வெளியீடுகள்

### EPIC வெளியீடுகள்

இலவசமாக விநியோகிக்கப்படுகிறது — ஈழச்செய்தி
ஆங்கில வெளியீடு — EELAM NEWS

வெலிக்கடைச் சிறைப்படுகொலை
வேட்டைகளின் பின்னணியிலுள்ள
சூத்திரதாரிகள் பற்றிய விபரங்கள்

EPRLF தோழரின் நேரடி அனுபவம் — வெலிக்கடை சிறைப் படுகொலைகள்

### EPRLF வெளியீடுகள்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை
முன்னணியின் பிரச்சார ஏடு — செந்தளம்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை
முன்னணியின் நடவடிக்கைகள்
பற்றியது — EPRLF IN EELAM LIBERATION STRUGGLE

### EPLF வெளியீடு

ஈழமக்கள் விடுதலை முன்னணியின்
பிரச்சார ஏடு — ஈழ முழக்கம்

### EWLF வெளியீடு

ஈழப்பெண்கள் விடுதலை முன்னணியின்
பிரச்சார ஆயுதம் — செந்தணல்

**வெல்க ! ஈழமக்கள் புரட்சிகர விடுதலைப் போராட்டம் !**

# ★ தோழர் ஸ்டாலின் போதிக்கிறார் ★



நமது பார்வை பின்னோக்கியதாக இருக்கக்கூடாது
முன்னோக்கியதாகவே இருக்கவேண்டும்.........
நாம் சீர்திருத்தவாதியாக இருக்கக் கூடாது
புரட்சிவாதியாகவே இருக்கவேண்டும் !

## ஈழ மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சார ஏடு
(EPLF)

Post Box No. 4967
T. Nagar
MADRAS-600 017.

பெயர்..........................................
விலாசம்..........................................
..........................................

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்